## புவி வெப்பமடைதலை தடுக்க வலியுறுத்தி

# சிறுவர்கள் நடத்திய விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம்

**திருச்சி, டிச. 4:** திருச்சியில் புவி வெப்பமடைதலை தடுக்க வலியுறுத்தி சிறுவர்கள் சனிக்கிழமை விழிப்புணர்வு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'மேக்ட்' வேர்கள் குழந்தைகள் இயக்கத்தின் சார்பில் ரயில்வே ஜங்ஷன் காதி கிராப்ட் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு அந்த இயக்கத்தின் மாநிலத் தலைவர் மணிமேகலை தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தின் போது சிறுவர்கள் புவி வெப்பமடைதலைத் தடுப்பதற்கான முழக்கங்களை எழுப்பினர்.



புவி வெப்பமடைதலை தடுக்க வலியுறுத்தி திருச்சியில் சனிக்கிழமை நடைபெற்ற விழிப்புணர்வு ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற சிறுவர்கள்.